# இலங்கை கடற்படை நடத்தை நெறிமுறைகள்



2026 ஜனவரி 01

# இலங்கை கடற்படை நடத்தை நெறிமுறைகள்

**வெளியீட்டுத் திகதி: 2026 ஜனவரி 01**

## பொருளடக்கம்


1. அறிமுகம்

2. கடற்படையின் தொலைநோக்குப் பார்வை

3. கடற்படையின் பணி

4. கடற்படையின் செயல்கள் மற்றும் கடமைகள்

5. அடிப்படை மதிப்புக் கொள்கைகள்

6. கடற்படை நடத்தை நெறிமுறை விதிகளைப் பின்பற்ற வேண்டிய நபர்கள்

7. கடற்படையில் ஒரு கடற்படை வீரரின் பங்கு

7.1 கடற்படை அமைப்புக்கு இணங்கி கடற்படை கடமைகளை நிறைவேற்றுதல்

7.2 பொதுமக்களுடன் இணைந்து பணியாற்றும் சூழலில் கடற்படை வீரரின் பங்கு

7.3 பணியின் போதும் அதற்கு வெளியிலும் தொழில்முறை கண்ணியத்தைப் பேணுதல்

8. நெறிமுறைகள் மற்றும் நேர்மை

8.1. மனித உரிமைகளின் பாதுகாப்பும் மனிதாபிமான அணுகுமுறையும்

8.1.1 மனிதாபிமானத்திற்கும் தனிப்பட்ட கண்ணியத்திற்கும் மதிப்பளித்தல்

8.1.2 பொதுமக்களை பாதுகாத்தல்

8.1.3 கடற்படை கட்டுப்பாட்டில் உள்ள தடுப்புக்காவலில் இருப்பவர்களை மனிதாபிமான முறையில் நடத்துதல்

8.2. இலஞ்சம் மற்றும் ஊழல் செயல்பாடுகளை முழுமையாக மறுத்தல்

8.3. உறவுகளுக்கு இடையிலான மோதல்களைத் தடுத்தல்

8.4. நிதி வெளிப்படைத்தன்மை

8.5. கடற்படை வசமுள்ள தகவல்களின் இரகசியத்தன்மை மற்றும் தகவல் தொடர்பு

8.5.1 கடற்படையிடம் உள்ள இரகசிய தகவல்களை பாதுகாத்தல்

8.5.2 சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள்

8.5.3 ஊடகங்களுடன் தொடர்புகளைப் பேணுதல்

8.6 கொள்முதல் மற்றும் நிதி நிர்வாகம்

8.6.1 கொள்முதல் செயல்முறையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

8.6.2 கொள்முதல் நடைமுறையில் தவிர்க்க வேண்டிய செயல்பாடுகள்

8.6.3 நிதி நிர்வாகத்தில் உள்ள பொறுப்புகள்

8.7. தகவல் அறிக்கையிடல் மற்றும் தகவல் வெளிப்படுத்தும் நபர்களின் பாதுகாப்பை

உறுதி செய்தல்

8.7.1 தகவல் அறிக்கையிடக்கூடிய சூழ்நிலைகள்

8.7.2 தகவல் அறிக்கையிடக்கூடிய நபர்கள்

8.7.3 தகவல் வழங்குநர்களின் பாதுகாப்பு

8.8 கடற்படை வீரர்களின் தொழில் மற்றும் வாழ்க்கை சமநிலையைப் பேணுதல்

8.9. அனைத்து கடற்படை உறுப்பினர்களும் அவர்களின் பதவி, தரம் மற்றும் பதவிக்கு ஏற்ப சமமாகவும் முறையாகவும் நடத்தப்படுதல்

8.10. தற்போதுள்ள சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை மீறுவது தொடர்பான புகார்களுக்குப் பொறுப்பேற்றல் மற்றும் அவற்றை அமல்படுத்துதல்.

8.10.1 கடற்படை உறுப்பினர்கள் தங்கள் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டிய முறைகள்

8.10.2 விதிமுறை மீறல்களுக்கு எதிராக எடுக்கக்கூடிய ஒழுங்கு நடவடிக்கைகள்

8.11. கடற்படை பயிற்சியின் மூலம் ஒழுக்கம் மற்றும் நல்ல நடத்தை மேம்படுத்துதல்

## 1.0 அறிமுகம்

இலங்கை கடற்படைக்கு இணைக்கப்பட்டு கடமைகளை நிறைவேற்றும் அனைத்து கடற்படை மற்றும் சிவில் பணியாளர்களும், கடற்படையில் நடைமுறையில் உள்ள கடற்படை சட்டம், விதிமுறைகள், உத்தரவுகள், கடற்படை சுற்றறிக்கைகள், பிற சுற்றறிக்கைகள் மற்றும் நிலையான உத்தரவுகளுக்கு இணங்க பணியாற்ற வேண்டும். 2023 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் விதிகளுக்கு இணங்க, நடத்தை நெறிகளின் அடிப்படையில் ஒவ்வொரு கடற்படை பணியாளருக்கும் கடற்படை நடத்தை நெறி தொகுப்பு அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த நடத்தை நெறி தொகுப்பு மேற்கண்ட எந்த ஆவணத்தையும் மீறாது; இதன் மூலம் அனைத்து கடற்படை மற்றும் சிவில் பணியாளர்களும் நேர்மையான மற்றும் ஒழுக்கமான முறையில் தங்கள் கடமைகளை நிறைவேற்றுவது எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.0 கடற்படையின் தொலைநோக்குப் பார்வை

இலங்கையின் கடல் வளங்களை பாதுகாத்து தேசிய பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், ஆழ்கடல் மற்றும் ஆழமற்ற கடல் பகுதிகளில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வலுவான கடற்படையாக மேம்படுதல்.

## 3.0 கடற்படையின் பணி

இலங்கையின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்ய தேவையான ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களுடன் உரிய பயிற்சியைப் பெற்று, கடல் வளங்களைப் பாதுகாத்து, பெருங்கடல் ஆதிக்கத்தை நிலைநிறுத்தக்கூடிய வலுவான கடற்படையாக மேம்படுதல்.

## 4.0 கடற்படையின் செயல்கள் மற்றும் கடமைகள்

ஒரு நாட்டின் கடற்படை ஈடுபடக்கூடிய செயல்பாடுகளின் முழு வீச்சும், ஒருபுறம் உயர்-தீவிரப் போர் முதல் மறுபுறம் மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் நிவாரண நடவடிக்கைகள் வரை பரந்துள்ளது. தனித்துவமான பணிகளாகப் பிரிக்கப்படக்கூடிய இந்த விரிவான செயல்பாடுகளுக்கு ஒரு குறிப்பிட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது. அதன்படி, இலங்கை கடற்படையின் பணிகள் இராணுவ, இராஜதந்திர மற்றும் சட்ட அமலாக்கம் ஆகிய மூன்று முக்கிய கூறுகளின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

## 5.0 அடிப்படை மதிப்புக் கொள்கைகள்

1. **கௌரவம்** – கௌரவம் என்பது கடற்படையிலும் கடற்படை பணியாளர்களிலும் அவர்களின் புகழ் பாதுகாக்கப்படும் வகையில் செயல்படுவதற்கான அடிப்படை மதிப்பாகும். கௌரவம் கடற்படை பணியாளர்களின் நெறிமுறைத் தரநிலைகளை பிரதிபலிக்கிறது. அதேபோல், இது கடற்படை பணியாளர்களின் செயல்களுக்கு வழிகாட்டும் சில விதிமுறைகளால்

மட்டும் வரையறுக்கப்படாமல், அவர்களின் ஒழுக்கநெறி மற்றும் சுயமரியாதையையும் வெளிப்படுத்துகிறது.

2. **நேர்மை** – ஒவ்வொரு கடற்படை வீரரும் தன்னிடமும், கப்பல் குழுவினரிடமும் மற்றும் பிற நபர்களிடமும் உண்மையானவராக இருக்க வேண்டும். ஒவ்வொரு கடற்படை பணியாளரும் பிறருடன் திறந்த மனதுடன் மற்றும் நேர்மையாக செயல்பட வேண்டும். நேர்மை என்பது தெளிவான மனச்சாட்சியுடனும், பிறரின் நலனை கருத்தில் கொள்ளும் சேவை மனப்பான்மையுடனும் பணியாற்றுவதற்கான திறனை வழங்குகிறது.

3. **ஒழுக்கம்** – ஒழுக்கம் என்பது எந்த விளைவு வந்தாலும் எப்போதும் சரியான செயல்களை மேற்கொள்ளும் உறுதிப்பாடாகும். ஒழுக்கமுள்ள கடற்படை பணியாளர்களாகஇ எத்தகைய விளைவுகள் ஏற்பட்டாலும் தவறான செயல்களைத் தடுக்கும் வகையில் எப்போதும் செயல்பட வேண்டும்.

4. **நம்பகத்தன்மை** - நம்பகத்தன்மை என்பது ஒருவரின் நாட்டிற்கும் ஒருவருக்கொருவருக்கும் சேவை செய்யும் பொறுப்பிற்கான அர்ப்பணிப்பாகும். நம்பகத்தன்மை, தேசத்திற்கும் ஒருவருக்கொருவருக்கும் இடையிலான பரஸ்பர பிணைப்பைப் பிரதிபலிக்கிறது. நம்பகத்தன்மைஇ ஒருவர் உடன் பணிபுரியும் மக்களிடையே பொறுப்புணர்வையும் கடமையுணர்வையும் வளர்க்கிறது.

5. **தைரியம்** - தைரியம் என்பது ஆபத்தான அல்லது கடினமான சூழ்நிலைகளில் தைரியத்துடன் எதிர்கொள்ளும் திறன் ஆகும். ஒரு மாலுமியின் தைரியம் அவனது பொறுப்புணர்வு, பணிவு மற்றும் தனிப்பட்ட முன்மாதிரியில் பிரதிபலிக்கிறது. எந்த அளவு கல்வியோ அல்லது அனுபவமோ ஒரு மாலுமியின் தைரியமின்மையை ஈடுசெய்ய முடியாது. தைரியம் என்பது ஒரு மாலுமியின் உடல் மற்றும் மன உறுதியைச் சார்ந்தது.

## 6.0 கடற்படை நடத்தை நெறிமுறை விதிகளைப் பின்பற்ற வேண்டிய நபர்கள்

1. அனைத்து அதிகாரிகளும் மாலுமிகளும்.

2. கடற்படை முகாம்களுக்கு இணைக்கப்பட்டு பணியாற்றும் அனைத்து சிவில் பணியாளர்கள்.

3. கடற்படையுடன் செயற்பாட்டில் இணைந்து செயல்படும் அனைத்து வெளிப்புற நபர்கள்

## 7.0 கடற்படையில் ஒரு கடற்படை வீரரின் பங்கு

1. ஒவ்வொரு கடற்படை உறுப்பினரும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கும் சட்டத்திற்கும் இணங்க நேர்மையுடன் செயல்படுதல்.

2. ஒரு கடற்படை உறுப்பினராக, இலங்கையின் உள்ளகத்திலோ அல்லது வெளிநாட்டிலோ தனி அரசை நிறுவுவதற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உதவுதல், ஆதரித்தல், நிதியுதவி செய்தல், ஊக்குவித்தல் அல்லது பிரசாரம் செய்தல் ஆகியவற்றில் ஈடுபடக் கூடாது.

3. தாய்நாட்டின் மீதான பெருமையுடன் தமது கடமைகளைச் சிறப்பாக

நிறைவேற்றுதல்.

**4.** ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகளில் தன்னார்வமாக முன்வந்து துணிச்சலுடன் செயலாற்றுதல்.

**5.** முன்மாதிரியான தலைமைத்துவத்தை வழங்குவதன் மூலம் மற்ற கடற்படை வீரர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்வது.

**6.** ஒரு கடற்படை உறுப்பினர் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பதவிக் கடமைகளை மிகுந்த பொறுப்புடனும் அயராது செயலாற்றியும் நிறைவேற்ற வேண்டும். மேலும் கடற்படையின் சிறந்த நிர்வாகத்தை உறுதிப்படுத்துவதற்காக சட்டங்கள், ஆணைகள், உத்தரவுகள் மற்றும் வழிமுறைகளின்படி தமக்குக் கீழ்ப்பட்ட அதிகாரிகளையும் பிறரையும் பயிற்றுவித்து ஒழுக்கமுள்ள நபர்களாக உருவாக்குதல் வேண்டும்.

**7.** பணியிடங்களின் வெற்றிக்கு பங்களிப்பதை தமக்குரிய பொறுப்பாகக் கருதி செயலாற்றுதல்.

**8.** எல்லா பணிகளையும் நிறைவேற்றும் போது நேர்மறையான சிந்தனையுடன் செயலாற்றுதல்.

**9.** பிற கடற்படை உறுப்பினர்கள் தொழில்முறை வளர்ச்சியிலும் அறிவு மேம்பாட்டிலும் முன்னேறுவதற்கு உதவியும் வழிகாட்டுதலும் வழங்குதல்.

**10.** கடமைகளை ஆற்றும்போது எல்லா நேரங்களிலும் சுய பாதுகாப்பையும் உபகரணங்களின் பாதுகாப்பையும் உறுதி செய்தல்.

**11.** ஏதேனும் சிவில் குற்றம் தொடர்பாக காவல்துறையால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுமானால், அது குறித்து கட்டளை அதிகாரி மூலம் கடற்படை தலைமையகத்துக்கு அறிவிக்க ஏற்பாடு செய்தல்.

### 7.1 கடற்படை அமைப்புக்கு இணங்கி கடற்படை கடமைகளை நிறைவேற்றுதல்

**1.** அனைத்து சட்டப்பூர்வ உத்தரவுகளையும் குறித்த நேரத்தில் மற்றும் துல்லியமாக பின்பற்றுதல்.

**2.** நோக்கம் தெளிவாக இல்லாத உத்தரவு கிடைத்தால், அதனுடன் தொடர்புடைய பொறுப்பான அதிகாரியிடம் விசாரித்து தேவையான ஆலோசனைகளைப் பெறுதல்.

**3.** பெறப்பட்ட உத்தரவுகள் கடற்படையின் தற்போதைய சட்டக் கட்டமைப்பிற்கு இணங்கவில்லை என உணரப்பட்டால், அதுகுறித்த விஷயத்தை உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தல்.

**4.** கடற்படையில் நடைமுறையில் உள்ள சட்ட விதிகளுக்கு உட்பட்டு மட்டுமே தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு எப்போதும் முயற்சி செய்தல்.

**5.** அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்ப முறைகளை செயல்படுத்துவதன் மூலம் செயல்திறன் மிக்க சேவையைப் பேணுதல்.

### 7.2. பொதுமக்களுடன் இணைந்து பணியாற்றும் சூழலில் கடற்படை வீரரின் பங்கு

**1.** நாட்டின் தலைமைத்துவத்திற்கும், பதவியமைப்பிற்கும் மற்றும் ஜனநாயகத்திற்கும் மதிப்பளித்தல்.

**2.** அரசியல் செயல்பாடுகளில் கலந்து கொள்ளாமல் இருப்பது.

3. அங்கீகரிக்கப்பட்ட சமூக மேம்பாட்டு முயற்சிகளுக்கு நேரடியாக பங்களித்தல்.

4. தேவைப்படும்போது தெளிவான மற்றும் துல்லியமான தொழில்முறைத் தகவல்களை வழங்குதல்.

5. பொதுமக்களிடம் எப்போதும் கடற்படை உத்தரவுகளை மீறாத வகையில் நடந்து கொள்வது.

6. ஊழலில் தொடர்புடைய சிவில் நபர்களை அடையாளம் காணும் போது, எப்போதும் காவல்துறையுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் ஏற்படக்கூடிய தடைகளை குறைத்துக்கொள்ளுதல்.

7. நீண்டகால சேவையின் போது உருவாகும் பல்வகை உறவுகளின் தாக்கத்தினாலும், கடற்படை ஒழுக்கமும் ஒழுங்குமுறையும் குன்றும் செயல்பாடுகளுக்கு ஒருபோதும் ஈடுபடாமல் இருப்பது.

**7.3. பணியின் போது மற்றும் அதற்கு வெளியிலும் தொழில்முறை கண்ணியத்தைப் பேணுதல்**

1. கடற்படை சீருடைக்கு ஏற்ற தொழில்முறை நடத்தையைப் பேணிக் கொள்வது.

2. எப்போதும் பாலின வேறுபாடின்றி சமத்துவத்துக்கு முன்னுரிமை அளித்து செயல்படுதல்.

3. கடற்படை வளங்களைப் பொறுப்புடனும் பொறுப்புணர்வுடனும் பயன்படுத்துதல்.

4. பாரம்பரிய செயன்முறைகளைக் கடந்து, நவீன தொழில்நுட்பமும் மூலோபாய அணுகுமுறைகளும் ஒருங்கிணைந்த தீர்வுகள் மூலம் செயல்திறனை மேம்படுத்துதல்.

5. தனிப்பட்ட வாழ்க்கையிலும் நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கும் நெறிமுறைகளுக்கும் ஏற்ப செயல்படுதல்.

6. கடற்படை உறுப்பினர்கள் கடற்படைச் சட்டத்திற்கும் சிவில் சட்டத்திற்கும் உட்பட்டவர்கள் என்பதால், அதனை கவனத்தில் கொண்டு எப்போதும் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுதல்.

7. சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போது பொறுப்புணர்வுடன் மற்றும் நெறிமுறைகளுக்கு ஏற்ப செயல்படுதல்.

8. சமூகத்திற்கு எப்போதும் நேர்மறையான மற்றும் பயனுள்ள பங்களிப்பை வழங்குவதற்காக செயல்படுதல்.

9. ஒரு கடற்படை வீரர் என்ற முறையில், இலங்கையிலிருந்து நச்சுப் போதைப்பொருட்களின் பயன்பாட்டை ஒழிப்பதற்குத் தேவையான ஆதரவையும் செயல்மிகு பங்களிப்பையும் வழங்குதல்.

## 8. நெறிமுறைகள் மற்றும் நேர்மை

### 8.1. மனித உரிமைகளின் பாதுகாப்பும் மனிதாபிமான அணுகுமுறையும்

#### 8.1.1. மனிதாபிமானத்திற்கும் தனிப்பட்ட கண்ணியத்திற்கும் மதிப்பளித்தல்

1. ஒவ்வொரு நபருக்கும் மனித உரிமைகள் சமமாக வழங்கப்படுகின்றன.
2. தேவையான சூழ்நிலைகளில் குறைந்தபட்ச பலத்தை மட்டுமே பயன்படுத்துதல்.

3. கடற்படைப் பணியாளர் அல்லது கடற்படை தொடர்பான நடவடிக்கையால் ஒரு நபரின் மனித உரிமைகள் மீறப்பட்டால், கடற்படையும் பொறுப்பேற்க வேண்டும்.

**8.1.2 பொதுமக்களை பாதுகாத்தல்**

**1.** அனைத்து குடிமக்களிடமும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்வது.

**2.** பொதுமக்களின் சொத்துகளையும் உயிரையும் பாதுகாத்தல்.

**3**. அவர்களின் தினசரி வாழ்க்கைக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயல்படுதல்.

**8.1.3. கடற்படை கட்டுப்பாட்டில் உள்ள தடுப்புக்காவலில் இருப்பவர்களை மனிதாபிமான முறையில் நடத்துதல்**

1. முறையான கைது நடைமுறைகளைப் பின்பற்றுதல்.
2. போதுமான உணவு, குடிநீர், பாதுகாப்பு மற்றும் தேவையான மருத்துவ சேவைகளை வழங்குதல்.
3. அவர்களின் சட்ட உரிமைகளைப் பாதுகாத்தல்.
4. காவலில் உள்ள நபர்கள் குறித்த முறையான பதிவேடுகளைப் பராமரித்தல்.
5. காவலில் உள்ள நபர்களிடமிருந்தோ அல்லது அவர்களின் நெருங்கியவர்களிடமிருந்தோ இலஞ்சம் அல்லது ஏதேனும் பலன்களைப் பெறும் நோக்கில், அவர்களுக்கு உதவி மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்காமல் இருப்பது.
6. உடல் ரீதியான அல்லது மன ரீதியான சித்திரவதை, பாலியல் வன்கொடுமை அல்லது அவமானப்படுத்தும் நடத்தைகளில் ஒருபோதும் ஈடுபடாமல் இருப்பது.

**8.2 இலஞ்சம் மற்றும் ஊழல் செயல்பாடுகளை முழுமையாக மறுத்தல்**

1. இலஞ்சம் மற்றும் ஊழல் நடைமுறைகளை முற்றிலுமாக நிராகரிக்க கடற்படை உறுப்பினர் ஒருவர் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள்.

**அ.** ஏதேனும் ஒரு அதிகாரப்பூர்வ நடவடிக்கை, தொழில்முறை தீர்மானம் அல்லது நிர்வாகச் செயல்முறையை பாதிக்கும் வகையில், யாருக்காவது அநியாயமான நன்மையை வழங்குதல், பெறுதல், கோருதல் அல்லது அத்தகைய நன்மையை வழங்க முன்மொழிவது இலஞ்சமாகக் கருதப்படுகிறது.

**ஆ.** அதன்படி, எந்தவொரு கடமையையும் நிறைவேற்றுவதற்கோ, அதை விரைவுபடுத்துவதற்கோ, தாமதப்படுத்துவதற்கோ, தடையிடுவதற்கோ அல்லது அதிலிருந்து விலகுவதற்கோ ஒரு தூண்டுதல் அல்லது பரிசாக, எந்தவொரு வகையான இலஞ்சத்தையும் (பணம், சொத்து, சலுகைகள் போன்றவை) கோருவதிலிருந்தும் அல்லது ஏற்றுக்கொள்வதிலிருந்தும் ஒருவர் தவிர்க்க வேண்டும்.

**இ.** இலஞ்சம் வழங்குதல், பெறுதல் மற்றும் கோருதல் ஆகிய அனைத்துவிதமான செயல்களும் கடுமையான ஒழுக்காற்று குற்றங்களாகும்; மேலும் அவை தொடர்புடைய சட்டங்களின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களாகவும் கருதப்படுகின்றன. இத்தகைய விதிகளை மீறுவது, அரசுப் பணியின் ஒழுக்காற்று

விதிகள், பிற தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழ் வரக்கூடிய குற்றமாகக் கருதப்படும்.

ஈ. ஊழல் என்பது, அரசிற்கு சட்டவிரோத இழப்பை ஏற்படுத்துவதற்கோ அல்லது தனக்கோ அல்லது பிறருக்கோ சட்டவிரோத நன்மையைப் பெறுவதற்கான நோக்கத்துடன், தனது பதவியை தவறாக பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் செயல்களாகும்.

உ. அதன்படி, அரசிற்கு சட்டவிரோத இழப்பை ஏற்படுத்துவதற்காகவோ அல்லது தனிப்பட்ட நலன்களுக்காகவோ அல்லது பிறரின் நலன்களுக்காகவோ, தமது பதவியை தவறாக பயன்படுத்தி எந்தவொரு செயலையும் செய்வதிலிருந்து ஒருவர் விலகி இருக்க வேண்டும்.

ஊ. ஊழலாக சந்தேகிக்கப்படும் எந்தவொரு செயலையும் தாமதமின்றி தொடர்புடைய அதிகாரிகளிடம் அறிவிக்க வேண்டும்.

எ. இத்தகைய விதிகளை மீறுவது, அரசுப் பணியின் ஒழுக்காற்று விதிகள், பிற தொடர்புடைய சட்டங்கள் மற்றும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழ் வரக்கூடிய குற்றமாகக் கருதப்படும்.

## 8.3 உறவுகளுக்கு இடையிலான மோதல்களைத் தடுத்தல்

1. அலுவல் கடமைகளுக்கும், தனிப்பட்ட, நட்பு, குடும்ப அல்லது வணிக உறவுகளிலிருந்து உருவாகும் தொடர்புகளுக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடும் இருக்கக்கூடாது.

2. ஏதேனும் ஒரு அதிகாரப்பூர்வ தீர்மானம் அல்லது நடவடிக்கையுடன் தொடர்புடைய நலன் முரண்பாடு ஏற்பட்டுள்ளபோதும் அல்லது ஏற்படக்கூடும் என அறிந்தபோதும், அதனை இயன்ற விரைவில் தமது மேலதிகாரிக்கு அறிவிக்க வேண்டும்.

3. இத்தகைய நலன் முரண்பாடு காணப்படும் சூழ்நிலைகளில், தீர்மானங்களை எடுக்கும் குழுவில் உறுப்பினராக செயல்படுவதிலிருந்து விலகி இருக்க வேண்டும்; ஆனால், உரிய அதிகாரியினால் நேரடியாக எழுத்து மூலம் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே, அந்த செயல்முறையில் ஈடுபட வேண்டும்.

4. அதிகாரப்பூர்வ கடமைகளுடன் முரண்படும் அல்லது ரகசியமான அதிகாரப்பூர்வ தகவல்களை தனிப்பட்ட நலனுக்காக பயன்படுத்தக்கூடிய வணிகங்கள், கூடுதல் வேலைவாய்ப்புகள் அல்லது தொழில்முறை செயல்பாடுகளில் ஈடுபடக் கூடாது.

5. இந்நியமங்களை மீறுவது, அரசுச் சேவையின் ஒழுக்காற்று விதிகள், தொடர்புடைய பிற சட்டங்கள் மற்றும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும்.

## 8.4 நிதி வெளிப்படைத்தன்மை

1. நிதி ஒழுக்கத்தை பேணுதல், தங்களுடைய சொத்துகளை முறையாக அறிவித்தல்.

அ. அநியாயமான முறையில் வருமானம் ஈட்டுதல் அல்லது பிற நிதி முறைகேடுகளுடன் தொடர்புடைய எந்தச் செயலிலும் ஈடுபடாமல் இருக்க வேண்டும் அதுபோன்ற செயல்களுக்கு ஆதரவு வழங்குவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆ. ஏதேனும் சட்டவிரோதமான வருமான ஈட்டலுடன் தொடர்புடைய அறிவு அல்லது தகவல் கொண்ட எந்த நபரும், அதனை உரிய அதிகாரியிடம் அறிவிக்க வேண்டும்.

இ. சொத்து மற்றும் கடன் அறிவிப்புகளை சமர்ப்பிக்க வேண்டிய நபர்கள், தங்களுடைய அறிவிப்புகளை ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் படி நிர்ணயிக்கப்பட்ட காலவரம்பிற்குள் முறையாக சமர்ப்பிக்க வேண்டும்.

ஈ. சொத்து மற்றும் கடன் அறிவிப்புகளை சமர்ப்பிப்பதற்கு கூடுதலாக, தமக்கு சொந்தமான சொத்துகளை தேவையான எந்தவொரு தருணத்திலும் வெளிப்படுத்துவது, அனைத்து கடற்படை பணியாளர்களின் கட்டாயப் பொறுப்பாகும்.

உ. இந்நியமங்களை மீறுவது, அரசுச் சேவையின் ஒழுக்காற்று விதிகள், தொடர்புடைய பிற சட்டங்கள், குற்றத்திலிருந்து பெறப்பட்ட சொத்துகள் தொடர்பான சட்டம் மற்றும் ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் கீழ் குற்றமாகக் கருதப்படும்.

## 8.5 கடற்படை வசமுள்ள தகவல்களின் இரகசியத்தன்மை மற்றும் தகவல் தொடர்பு

1. கடற்படை வசம் உள்ள இரகசியத் தகவல்களைப் பாதுகாத்தல்.

அ. அதிகாரப்பூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான தகவல்களுக்கு மட்டுமே அணுகல் பெற வேண்டும்.

ஆ. கடமையில் ஈடுபட்டிருக்கும் போதும், அப்படியல்லாத நேரங்களிலும், எப்போதும் தகவல் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இ. அனைத்து பயனர்களும் தகவல் பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் அமைப்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

ஈ. அதிகாரப்பூர்வ ஆவணங்களில் உள்ள தகவல்கள் மற்றும் கணினி முறைமைகளில் உள்ள மென்பொருட்கள், தரவுகளை மாற்றுதல், நகலெடுத்தல், அழித்தல் அல்லது உரிய அனுமதியின்றி மென்பொருட்களை நிறுவுதல் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

உ. இரகசிய ஆவணங்களும் தரவுகளும் உரிய முறையில் பாதுகாப்பாக சேமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஊ. இரகசியமான அல்லது நுணுக்கமான தகவல்களை பரிமாறும் போதும் பயன்படுத்தும் போதும், நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு முறைகளை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும்.

எ. இரகசிய ஆவணங்கள், தேவையான சந்தர்ப்பங்களில், உரிய அதிகாரியின் முன் அனுமதியைப் பெற்று, அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளின்படி மட்டுமே அழிக்கப்பட வேண்டும்.

ஏ. தேசியப் பாதுகாப்பைப் பாதிக்கும் முக்கியத் தகவல்களைஇ அங்கீகரிக்கப்படாத அல்லது தொடர்பில்லாத நபர்களுக்கு வழங்காமல் இருப்பது.

ஐ. இரகசிய அல்லது உணர்வுபூர்வ தகவல்களுடன் தொடர்புடைய எந்தவொரு ஆபத்துகளையும் அல்லது கவனிக்க வேண்டிய விடயங்களையும் அறிந்தவுடன்இ உடனடியாக தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவிக்க வேண்டும்.

2. சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள்

அ. கடற்படையுடன் தொடர்புடைய எந்தவொரு தகவல்களையும் சமூக ஊடகங்களில் பதிவேற்றம் செய்யாமல் இருக்க வேண்டும்.

ஆ. பாதுகாப்பு நடவடிக்கைகள் அல்லது உணர்வுபூர்வ அம்சங்களுடன் தொடர்புடைய தகவல்களை சமூக ஊடகங்களில் பதிவேற்றுதல், பகிர்வு மற்றும் கருத்துரைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ளக்கூடாது.

இ. அரசியல், மத மற்றும் இனவாத சார்ந்த சமூகத்தைத் தூண்டக்கூடிய கருத்துகள், அறிக்கைகள், புகைப்படங்கள் அல்லது காணொளிகளை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும்.

ஈ. சமூக ஊடகங்களில் தொழில்முறை கௌரவத்தை பேணும் வகையில் செயல்பட வேண்டும்.

உ. சமூக ஊடகங்களில் வெறுப்புணர்ச்சி தூண்டும், அவதூறான அல்லது அச்சுறுத்தும் கருத்துக்களைப் பதிவிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

3. ஊடகங்களுடன் தொடர்புகளை பேணுதல்

ஊடகங்களிடம் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, கடற்படையின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க, அங்கீகரிக்கப்பட்ட/அதிகாரப்பூர்வ தகவல்கள் மட்டுமே வெளியிடப்பட வேண்டும். மேலும், அத்தகைய அறிக்கைகள் எப்போதும் உண்மையாகவும் ஆதாரங்களுடன் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதுமட்டுமின்றி, ஊடகங்களின் விசாரணைகளுக்கு உடனடியாகவும் மரியாதையுடனும் பதிலளிக்கப்பட வேண்டும்.

## 8.6 கொள்முதல் மற்றும் நிதி நிர்வாகம்

1. கொள்முதல் செயல்முறையில் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள்.

அ. அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் நிதி விதிமுறைகள் மற்றும் கொள்முதல் வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆ. தனிப்பட்ட ஆதாயம் அல்லது நலன்களின் அடிப்படையில் கொள்முதல் முடிவுகளை எடுக்காமல் இருப்பது.

இ. விநியோகத்தாரர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் திறன், நம்பகத்தன்மை மற்றும் சட்டபூர்வத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஈ. அனைத்து பரிவர்த்தனைகள் மற்றும் ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய ஆவணங்களை முறையாகவும் துல்லியமாகவும் பராமரிக்க வேண்டும்.

உ. கொள்முதல் செயல்முறையின் போது பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக சமர்ப்பிக்கப்படும் விலைப் பட்டியல்களின் இரகசியத்தன்மையும்

வெளிப்படைத்தன்மையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

### 3. நிதி நிர்வாகத்தின் பொறுப்புகள்

அ. அங்கீகரிக்கப்பட்ட நிதியிலிருந்து அதிகபட்ச பயனைப் பெறுவதற்கும்இ அந்த நிதி செலவினத்தின் மூலம் பயன் பெறும் பிற நபர்களுக்கு அதிகபட்ச நன்மை கிடைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஆ. அனைத்து கொள்முதல் மற்றும் செலவீனங்கள் 'பணத்திற்கான மதிப்பு' என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

இ. அங்கீகரிக்கப்பட்ட நிதி வரம்புகளுக்குள் மட்டுமே செலவுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஈ. அனைத்து வகையான செலவுகளும் தேவையான அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும்.

உ. அனைத்து நிதி பரிவர்த்தனைகளுக்கும் தொடர்புடைய விரிவான ஆவணங்களை முறையாக பராமரித்து, பதிவுகளை பேண வேண்டும்.

ஊ. தணிக்கை மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

## 8.7. தகவல் அறிக்கையிடல் மற்றும் தகவல் வெளிப்படுத்தும் நபர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல்

### 8.7.1 தகவல் அறிக்கையிடக்கூடிய சூழ்நிலைகள்

1. குற்றச் செயல்கள்
2. ஊழல் அல்லது மோசடி
3. மனித உரிமைகள் மீறுதல்
4. கடற்படைச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறுதல்.
5. தங்களது நிறுவனத்தின் பாதுகாப்பிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயல்கள்.
6. இந்த ஒழுங்குமுறை தொகுப்பை மீறுதல்.

### 8.7.2 தகவல் அறிக்கையிடக்கூடிய நபர்கள்

1. கடற்படை தளபதி, கட்டளை தளபதி, துணை கட்டளை தளபதி, திணைக்களத்தின் தலைவர்கள், கட்டளை அதிகாரி, பிற பொறுப்புடைய அதிகாரி, பிரிவிற்கு பொறுப்பான அதிகாரி அல்லது பிரிவு முறையின் கீழ் உள்ள பிரிவு பொறுப்பில் உள்ள மாலுமிகளுக்கு
2. ஒழுக்காற்று பிரிவிற்கு.
3. உள்விவகாரப் பிரிவுக்கு.

### 8.7.3 தகவல் வழங்குநர்களின் பாதுகாப்பு

1. தகவல் வழங்குபவர்களின் பெயர், முகவரி மற்றும் தனிப்பட்ட தகவல்களை எவ்விதத்திலும் வெளிப்படுத்தாமல், அவர்களின் அடையாளத்தை எப்போதும் பாதுகாத்தல்.

2. தகவல் வழங்குபவர்கள் பணிநீக்கம், பதவி தாழ்த்தல் மற்றும் அநியாய இடமாற்றங்கள் போன்ற பழிவாங்கும் நடவடிக்கைகளால் அவர்களின் தொழில்வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட வேண்டும்.

3. தகவல் வழங்குபவர்கள் எதிர்கொள்ளும் எந்தவொரு பிரச்சினையிலும் அவர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

4. நிறுவனத்தின் உள்ளகத்தில் நடைபெறும் மோசடி மற்றும் ஊழலை குறைப்பதன் மூலம் தகவல் வழங்குபவர்களின் நம்பகத்தன்மையை நிலைநிறுத்த வேண்டும்.

## 8.8 கடற்படை வீரர்களின் தொழில் மற்றும் வாழ்க்கை சமநிலையைப் பேணுதல்

1. தன் கீழ் பணிபுரியும் கடற்படை வீரர்கள் காலம்தோறும் நேர்முகப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

2. கடற்படை வீரர்களுக்குத் தேவையற்ற அழுத்தத்தைக் கொடுக்காமல் இருப்பது.

3. அனைத்து கடற்படை வீரர்களின் தொழில்முறை வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கை இடையிலான சமநிலையை பேண தேவையான ஆதரவு வழங்குதல்.

5. கடற்படை வீரர்களின் நிர்வாகம் மற்றும் நலன் தொடர்பாக தொடர்ச்சியாக கண்காணித்தல்.

## 8.9. அனைத்து கடற்படை உறுப்பினர்களும் அவர்களின் பதவி, தரம் மற்றும் பதவிக்கு ஏற்ப சமமாகவும் முறையாகவும் நடத்தப்படுதல்

1. கடற்படையின் அனைத்து பதவிகளுக்கும் மற்றும் தர நிலைகளுக்கும் உரிய நடைமுறைகளின் படி மரியாதை செலுத்துதல்.

2. கடற்படையின் அனைத்து பிரிவுகளுக்கும் நியாயமான மற்றும் சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

## 8.10. தற்போதுள்ள சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களை மீறுவது தொடர்பான புகார்களுக்குப் பொறுப்பேற்றல் மற்றும் அவற்றை அமலபடுத்துதல்.

1. **கடற்படை பணியாளர்கள் பொறுப்பேற்க வேண்டிய விதம்**

அ. அறிக்கையிடப்படும் அனைத்து விதிமீறல்களும் பொறுப்புடைய அதிகாரியிடம் அறிக்கையிடப்பட வேண்டும்.

ஆ. முறையற்ற நடத்தையைக் கண்காணித்தல்.

இ. சம்பவங்களை உரிய முறையில் விசாரணை செய்தல்.

ஈ. உகந்த ஒழுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

உ. உகந்த தலைமைத்துவத்தின் மூலம் விதிமீறல்களைத் தடுத்தல்.

2. **விதிமீறல்களுக்கு எதிராக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள்**

அ. நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் (வழிகாட்டுதல், எச்சரிக்கை வழங்குதல்).

ஆ. கடற்படை சட்டத்தின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

இ. சிவில் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடருதல்.

ஈ. சம்பந்தப்பட்ட தரப்பினரிடமிருந்து நிதி இழப்புகளை மீட்டெடுத்தல்.

## 8.11. கடற்படை பயிற்சியின் மூலம் ஒழுக்கம் மற்றும் நல்ல நடத்தை மேம்படுத்துதல்

1. ஒவ்வொரு கடற்படை பணியாளரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலைகளில் பயிற்சியின் மூலம் சிறந்த ஒழுக்கமும் ஒழுங்கும் பெற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அ. அனைத்து கடற்படை பணியாளர்களின் அடிப்படை பயிற்சி, வருடாந்திர பயிற்சி மற்றும் தலைமைத்துவ பயிற்சி பாடநெறிகள் ஆகியவற்றின் மூலம்.

ஆ. வருடாந்திரமாக நடைபெறும் பயிற்சி அமர்வுகள் மூலம்.

இ. பணியின் தன்மைக்கு ஏற்ப வழங்கப்படும் சிறப்பு பயிற்சிகள் மூலம்.

ஈ. ஒவ்வொரு துறையின் படி நடத்தப்படும் பயிற்சி பாடநெறிகள் மூலம்.

9.0 இந்த நடத்தை நெறி தொகுப்பு வெறும் வழிகாட்டுதல் ஆவணமாக மட்டுமன்றி, கட்டாயமான சட்டப்பூர்வப் பிணைப்பை உடையதாகும். இது இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டம், அக்காலத்தில் நடைமுறையில் உள்ள சகல சட்டங்கள், உபசட்டங்கள், விதிமுறைகள், ஒழுங்குவிதிகள், சுற்றறிக்கைகள், நிறுவனம் சார்ந்த தொகுப்புகள், பொது சேவை ஆணைக்குழு விதிகள், நிதி ஒழுங்குமுறை (நிதி விதிமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகள்) என்பவற்றுடனும், அதிகாரமுள்ள அதிகாரிகளால் அவ்வப்போது வெளியிடப்படும் அனைத்து உத்தரவுகள், அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களுடனும் இணைந்ததாகவும், அவற்றின் விதிமுறைகளுக்கு ஏற்பவும் கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

10.0 கடற்படைச் சட்டத்திற்கு உட்பட்ட கடற்படை பணியாளர்கள், கடற்படை முகாம்களுக்கு இணைக்கப்பட்டு பணியாற்றும் அனைத்து சிவில் பணியாளர்கள், மேலும் கடற்படையுடன் செயற்படையாக தொடர்புடைய அனைத்து வெளிப்புற நபர்களும், இந்நெறிமுறைத் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் ஏற்பாடுகளை நன்கு புரிந்து கொண்டு அவற்றை பின்பற்றுவதை உறுதிப்படுத்தும் பொறுப்பு அனைத்து நபர்களுக்கும் உரியதாகும்.

11.0 நீங்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு தீர்மானமும் மற்றும் செயல்பாடும் உங்களை மட்டுமன்றி, முழு இலங்கை கடற்படையின் அடையாளத்தையும், கௌரவத்தையும் பிரதிபலிப்பதாக இருப்பதால், எப்போதும் நியாயமான, சரியான மற்றும் பொறுப்பான தீர்மானங்களை எடுக்கத் தேவையான கவனத்துடன் செயற்பட வேண்டும். மேலும், முன்மாதிரியான நடத்தை, தொழில்முறைத் தன்மை மற்றும் கௌரவத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்முறை பண்பாட்டை உருவாக்கவும், பேணவும் செயற்படையாகவும் தொடர்ச்சியாகவும் பங்களிக்க வேண்டும்.

12.0 இந்த நடத்தை நெறிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம், இலங்கை கடற்படை இலங்கை மக்களிடையே நம்பிக்கையை வளர்த்து, மரியாதையுடனும் திறம்படவும் சேவையை வழங்குவதை உறுதி செய்யும்.

13.0 அனைத்து கடற்படைப் பணியாளர்களும் இவ் நடத்தை நெறிமுறையை கவனமாக

வாசித்து, அதன் உள்ளடக்கத்தை நன்கு உணர்ந்து, அதன்படி தங்கள் கடமைகளை நிறைவேற்ற வேண்டும்.

14.0 இவ்வொழுக்க நெறிமுறைகள் ஆண்டுதோறும் கடற்படை இயக்குநர் ஜெனரல்கள் மற்றும் பிராந்திய அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, அதற்கமைவாக காலத்திற்கு ஏற்றபடி புதுப்பிக்கப்பட வேண்டும்.